# ஹிஜ்ரத்

## ஓர் உன்னத சமூகத்தை இலக்காகக் கொண்ட பயணம்

**எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A.)**

அங்கம் -01

### அறிமுகம்

இறுதித் தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவை நோக்கி மேற்கொண்ட ஹிஜ்ரத் வரலாற்றுச் சிறப்புமிக்கது. வரலாற்றின் போக்கில் இந்நிகழ்ச்சி ஒரு பிரிகோடாக அமைவதோடு, முக்கியமான ஒரு திருப்புமுனையை ஏற்படுத்திய மதிப்புக்குரிய நிகழ்வாக மதிக்கப்படுகிறது. இந்நிகழ்வை மையமாக வைத்து இஸ்லாமிய ஆண்டு கணிக்கப்படுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம்.

இஸ்லாமிய வரலாற்றில் மட்டுமன்றி, முழு மனித இன வரலாற்றிலுமே இந்நிகழ்ச்சி ஒரு மகத்தான திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. இஸ்லாம் மிக வேகமாகப் பரவி, தரணியெங்கும் தன் ஒளிக்கதிர்களை வீசி, மனித இனம் என்றும் மறவாத மறக்க முடியாத ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. முழுமையான இறை நியதிகளின் நிழலில் இஸ்லாமிய சமூகக் கட்டமைப்பு வடிவமைக்கப்படவும் அதனூடாக ஆன்மிக ஒழுங்கமைப்புச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் அரசியல் விழுமிய எழுச்சி ஏற்படுத்தப்படுவதற்கும் உறுதுணையாக ஹிஜ்ரத் நிகழ்வே அமைந்தது.

இறைமறுப்புக் கோட்பாடும் பலதெய்வ வழிபாடும் ஆன்மிக வறுமையும் அராஜக அரசியலும் நடைபெற்றுக் கொண்டிருந்த அரபு தேசத்தில் வஹியின் நிழலில் ஓரிறைக் கொள்கையை எடுத்துரைத்த போது, நபி (ஸல்) அவர்கள் கடுமையான இன்னல்களுக்கும் கொடுமையான தாக்குதல்களுக்கும் ஆளானார்கள்.

ஓர் இறையேற்புக் கோட்பாட்டை ஏற்காத இறைமறுப்புக் கோட்பாட்டாளர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களை கொலை செய்வதற்குக் கூட முயற்சி செய்தார்கள். அதுமட்டுமல்லாமல் ஏகத்துவக் கோட்பாட்டை ஏற்றவர்களையும் விட்டு வைக்கவில்லை. இணைவைப்போரின் கொடிய கொடுமைகளுக்கு மத்தியில் மக்காவில் ஓரிறைக் கொள்கையை பரப்புவது முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்கு பெரும் போராட்டமாகவே இருந்தது.

மக்கத்துக் குறைஷியர்கள் இஸ்லாத்தின் தூதை ஏற்றுக் கொள்ளும் மனோ தர்மத்தில் இல்லை என்று நன்கு உணர்ந்த பின்னர், மக்காவிற்கு அண்மையிலுள்ள வேறு ஊர்களில் இக்கொள்கையை பரப்பலாம் என்றெண்ணி பல ஊர்களுக்கும் சென்றார்கள். ஆனால், போன இடம் எங்கும் போதிய ஆதரவு கிட்டவில்லை.

மக்காவில் நபி (ஸல்) அவர்களும் அவர்களது தோழர்களும் பெரும் துன்பங்களுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகிக் கொண்டிருந்த அதேவேளையில், மதீனாவில் இஸ்லாம் பரவத் தொடங்கியது. நபித் தோழர்களின் ஹிஜ்ரத் மக்கத்து முஷ்ரிக்குகளின் தொல்லைகளால் நபித் தோழர்கள் மக்காவைத் துறந்து வேறு நாடுகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் அனுமதியுடன் அபிசீனியா நாட்டிற்கு உஸ்மான் (ரழி) மற்றும் அவர்களது துணைவியாரும் நபி (ஸல்) அவர்களின் மகளுமான ருகைய்யா (ரழி) ஆகியோர் உட்பட பல நபித் தோழர்கள் ஹிஜ்ரத் செய்தார்கள். அபிசீனியாவில் அப்போது ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர் கிறித்தவ மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் அங்கு அடைக்கலமாக வந்த முஸ்லிம்கள் இஸ்லாத்தைக் கடைப்பிடிப்பதற்கோ தங்கள் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றவோ தடை ஏதும் இருக்கவில்லை. இந்நிலையில் நபி (ஸல்) அவர்கள் ஒரு கனவு கண்டார்கள். அந்தக் கனவில் முஸ்லிம்கள் ஹிஜ்ரத் செய்வதாக நபி (ஸல்) அவர்களுக்குக் காட்டப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி "இரண்டு கருங்கல் மலைகளுக்கு இடையில் பேரீச்ச மரங்கள் நிறைந்த (மதீனா) பகுதியை நீங்கள் ஹிஜ்ரத் செய்கின்ற நாடாக நான் காட்டப்பட்டேன்" என்று கூறினார்கள். (புகாரீ 3622)

நபி (ஸல்) அவர்கள் தனது ஏகத்துவப் பிரசார முயற்சியில் மனந்தளர்ந்துவிடாமல் வருடா வருடம் பல பாகங்களிலிருந்தும் மக்காவை நோக்கி வருகின்ற யாத்திரிகர்களைச் சந்தித்து, இஸ்லாத்தின் தூதை எத்தி வைத்தார்கள். மினாவில் அகபா மலையடிவாரத்தில் இடம்பெற்ற யாத்திரிகர்களுடான சந்திப்புக்களே அகபா உடன்படிக்கைகள் (பைஅதுல் அகபா) என வரலாற்றில் அழைக்கப்படுகின்றன. இதுவே, நபி(ஸல்) அவர்கள் செய்த விழுமியம் நிறைந்த ஓர் உன்னத சமூக உருவாக்கத்திற்கான முதல் அரசியல் உடன்படிக்கையாகவும் கருதப்படுகிறது.

### முதலாம் அகபா உடன்படிக்கை

நபி(ஸல்) அவர்கள் யாத்திரிகர்களிடம் தனது சத்தியப் பிரசாரத்தை எத்திவைக்க முயற்சித்த போது, மதீனாவைச் சேர்ந்த அவ்ஸ் - கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த அறுவரை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் சிறந்த பண்புகளாலும், உயரிய ஒழுக்கத்தாலும், வாய்மையான வார்த்தைகளாலும் கவரப்பட்ட அவர்கள், நபி (ஸல்) அவர்கள் மீது நன்மதிப்பும், மரியாதையும், அன்பும் கொண்டனர். அத்தோடு அவர்களது கோத்திரத்தைச் சேர்ந்த மேலும் ஆறு பேரை நபி (ஸல்) அவர்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

நபி(ஸல்) அவர்களின் தூதை ஏற்றுக் கொண்ட இவர்களில் அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த இருவரும், கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த பத்துப்பேரும் அடங்குவர்.

இவர்கள் அனைவரும் நபி(ஸல்) அவர்களுடன் பின்வரும் விஷயங்களைக் கொண்ட உடன்படிக்கை ஒன்றில் விசுவாசப் பிரகடணம் (பைஅத்) செய்து கொண்டனர். (இது கி.பி. 621ல் நுபுவ்வத்தின் 11ஆம் வருடம் நடைபெற்றது).

**“1. அல்லாஹ்வுக்கு ஒருவரையும் இணையாக்குவதில்லை.**
**2. களவு எடுப்பதில்லை.**
**3. விபச்சாரம் புரிவதில்லை.**
**4. தமது பிள்ளைகளைக் கொல்வதில்லை.**

**5. அறிந்து கொண்டே தீமைகள் புரிவதில்லை**
**6. கற்புள்ளவர்களை அவதூறு கூறுவதில்லை**
**7. நன்மைதரும் இறைக் கட்டளைகள் எதற்கும் மாறு செய்வதில்லை.**
**8. எல்லா நிலைகளிலும் நபியவர்களுக்கு உறுதுணையாக இருத்தல்.”**

அறிவிப்பவர் : உபாதத் இப்னு ஸாமித் (ரலி); நூல் : புகாரி

மேற்படி நிபந்தனைகளைக் கொண்ட உடன்படிக்கையே அகபா உடன்படிக்கை எனப்படுகிறது.

இவ்வுடன்படிக்கை முடிந்த பின்னர் மதீனா வாசிகளின் வேண்டுகோளுக்கிணங்க முஸ்அப் இப்னு உமைர் (ரலி) எனும் நபித்தோழரை நபி (ஸல்) அவர்கள் இஸ்லாமியப் பிரசாரத்திற்காக மதீனாவிற்கு அனுப்பி வைத்தார்கள்.

## இரண்டாம் அகபா உடன்படிக்கை

முதலாம் அகபா உடன்படிக்கைக்குப் பின்னர் மதீனாவிற்குத் திரும்பிய அவ்ஸ், கஸ்ரஜ் கூட்டத்தைச் சேர்ந்தவர்களும், முஸ்அப் இப்னு உமைர் (ரலி) அவர்களோடு இஸ்லாமியப் பிரசாரத்தில் ஈடுபட்டனர். இப்பிரசாரத்தின் பயனாக மதீனாவிலுள்ள அனைத்து வீடுகளுக்கும் இஸ்லாத்தின் தூது சென்றடைந்தது. இப் பிரசாரத்தின் விளைவாக நபித்துவத்தின் 12ஆம் வருடம், நபி (ஸல்) அவர்களை மீண்டும் சந்திப்பதற்கு மதீனாவாசிகள் வருகை தந்தனர். அதில் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சேர்ந்த 62 பேரும், அவ்ஸ் கோத்திரத்தைச் சேர்ந்த 11 பேரும், இரு பெண்களும் கலந்து கொண்டனர்.

துல்ஹஜ் மாதம் 13ஆம் நாள் நபி (ஸல்) அவர்களுடனான இரகசிய சந்திற்பிற்கு ஏற்பாடாகியிருந்தது. இரவின் பிற்பகுதியில் நடைபெற்ற இச்சந்திப்பில் நபி (ஸல்) அவர்களின் சார்பாக அப்பாஸ் (அப்போது இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை) ஒப்பந்தப் பேச்சாளராகக் கலந்து கொண்டார்கள்.

மதீனா வாசிகளின் முன்னிலையில் நபி (ஸல்) அவர்களின் நிலைபற்றியும், அவர்களது எதிர்பார்ப்பு பற்றியும் அழகாகவும், ஆழமாகவும் விளக்கப்படுத்தினார்கள். இதனடிப்படையில் நபி (ஸல்) அவர்களுடன் மீண்டும் பின்வரும் நிபந்தனைகளை உள்ளடக்கிய உடன்படிக்கையை செய்து கொண்டார்கள்.

**“1. அல்லாஹ் ஒருவனையே வணங்கவேண்டும். அவனுக்கு இணை வைக்கக்கூடாது.**
**2. நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கவேண்டும்.**
**3. எனது எதிரிகளை உங்களது எதிரிகளாகக் கருத வேண்டும்.**
**4. நான் அங்கு வருகின்றபோது எமக்கு உதவ வேண்டும். அத்தோடு உங்களது மனைவி மக்களுக்கும், உறவினர்களுக்கும் பாதுகாப்பளிப்பது போன்று எமக்கும் பாதுகாப்பளிக்க வேண்டும்.”**

இதுவே, இரண்டாம் அகபா உடன்படிக்கை என வரலாற்றில் அழைக்கப்படுகிறது.

மதீனாவில் இஸ்லாமியப் பிரசாரத்திற்காக பிரசாரர்களை அவர்களில் இருந்து தேர்வு செய்து, தத்தமது குடும்ப உறவினர்களுக்கு இஸ்லாத்தை எத்திவைக்கின்ற மகத்தான பொறுப்பைச் சுமத்தினார்கள். இந்த இராஜதந்திர நடவடிக்கைகளை நோக்குகின்ற போது, நபி (ஸல்) அவர்களின் தீட்சண்யமான பார்வையும், தூரநோக்கும் சமூகக்கட்டமைப்பை சரியாக வடிவமைக்க மேற்கொண்ட ஆழமான சிந்தனையும் வெளிப்படுகின்றன. நீண்ட நாள் அவகாசமெடுத்து, திட்டமிடப்பட்ட அவர்களின் பயணம் எவ்வளவு தூரநோக்கோடு மேற்கொள்ளப்பட்டது என்பதும் புலனாகிறது.

நபி (ஸல்) அவர்கள் மதீனா வாசிகளின் அழைப்பை ஏற்றாலும் நேரகாலத்தோடு மக்கா வாசி(களான முஹாஜிர்)களை ஒட்டு மொத்தமாக அனுப்பிவைக்க விரும்பவில்லை. பகுதி பகுதிகளாகவே அனுப்பி வைத்தார்கள். அத்தோடு அபூபக்ர் (ரழி) அவர்களை அழைத்து பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு பணித்து பிரயாண வழிமுறை பற்றி அறிவுறுத்தினார்கள். அபூபக்ர் (ரழி) அவர்கள் ஒரு வழிகாட்டியை ஏற்பாடு செய்தார்கள்.

இதன் பின்னர் அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் காத்திருந்த அவர்கள் கட்டளை வந்தவுடன் பயணத்தை மேற்கொண்டார்கள். நபி (ஸல்) அவர்கள் மேற்கொண்ட இப்பயணத்தை ஆழ்ந்து ஆராயும் போது எவ்வளவு தூரம் நின்று நிதானித்து ஆழமாகத் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பது வெளிப்படுகிறது.

அனைத்து ஏற்பாடுகளும் கச்சிதமாக மெற்கொள்ளப்பட்ட வேளை மதீனத்து மக்களின் அபிலாஷை நபியவர்களின் வருகையை ஆவலுடன் வேண்டி நின்றபோது, அல்லாஹ்வின் ஆணையும் வந்தவுடன் மதீனா நகரத்திற்கு நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள். அங்கு நபி (ஸல்) அவர்களுக்கு பேராதரவு கிட்டியது.

(இன்னும் வளரும்)